**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**மானிடவியல்கள் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்**

**சட்ட கற்கைகள் திணைக்களம்**

**சட்டமாணித் திட்டம் - மட்டம் VI**

**இறுதிப் பரீட்சை – 2020/2021**

**LWU 4323/LLU 6715 - தொழிற் சட்டம்**

**காலம் - 03 மணித்தியாலங்கள்**

---

**திகதி: 14 செப்டெம்பர் 2021** **நேரம்: காலை 9..30 – மாலை 12..30**

---

**வினாக்களின் எண்ணிக்கை: 05**

**நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.**

**தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.**

1. ஈஸி ரெக் பிறைவேற் லிமிற்றெட் என்பது நன்கறியப்பட்ட மென்பொருள் கம்பனி ஒன்றாகும். மகீஷா என்பவள் மென்பொருள் விருத்தியாளர் ஒருவராக அக் கம்பனியில் 2021 ஜனவரியில் சேர்ந்தாள். மகீஷாவிற்கும் அக் கம்பனிக்கும் இடையேயான உடன்படிக்கைக்கமைய, அக் கம்பனியானது அதனது வாடிக்கையாளர்களிடம் இருந்து கட்டளைகளைப் பெற்று, அக் கட்டளைகளை மகீஷாவிற்கு அனுப்புகிறது. ஒவ்வொரு மாதத்திலும் அவள் பொறுப்பேற்று நிறைவேற்றுகின்ற கட்டளைகளின் அடிப்படையில் அக் கம்பனியானது ஒவ்வொரு மாதமும் கமிஷன் ஒன்றை வழங்குகின்றது. மேலும், அந்த உடன்படிக்கையானது வேறு ஏதேனும் கம்பனியுடன் ஏதேனும் மென்பொருள் உடன்படிக்கையில் மகீஷா ஈடுபடுவதனைத் தடைசெய்கின்ற வாசகமொன்றைக் கொண்டுள்ளது. வாரமொன்றில் மூன்று நாட்களுக்கு அலுவலகத்திற்கு வருகை தருமாறு மகீஷா வேண்டப்பட்டாள் ஆயினும் வருகைதரு பதிவேட்டில் கையொப்பமிடுமாறு அவள் வேண்டப்படவில்லை. ஆயினும், நாட்டில் கொவிட் - 19 பெருந்தொற்றின் காரணமாக, அக் கம்பனியானது எல்லா ஊழியர்களையும் வீட்டிலிருந்து வேலை செய்யுமாறு வேண்டியது. அக் கம்பனியானது ஊழியர்களின் தனிப்பட்ட இணையதரவு பயன்பாட்டிற்காக 'டேற்றா அலவன்ஸ்' என அழைக்கப்படுகின்ற விசேட அலவன்ஸ் ஒன்றினை வழங்குகின்றது. அக் கம்பனியானது அந்த 'டேற்றா அலவன்ஸ்' இனை மகீஷாவிற்கு வழங்கவில்லை. அக் கம்பனியின் முகாமைத்துவமானது வேலைநாள் அட்டவணை ஒன்றிற்கமைய குறித்த நாட்களில் அலுவலகத்தில் வேலை செய்வதற்கு ஊழியர்களை அழைப்பதற்குத்

தீமானித்துள்ளது. ஆயினும், முகாமைத்துவமானது அவள் வீட்டிலிருந்து தொடர்ந்து வேலைசெய்ய முடியுமென மகீஷாவிற்கு அறிவித்துள்ளது.

மகீஷா தனக்கு அந்த 'டேற்றா அலவன்ஸ்' இனை வழங்குமாறு முகாமைத்துவத்தைக் கேட்டாள். ஆயினும், அவள் அந்த கம்பனியின் ஊழியர் ஒருவர் அல்ல தெரிவித்து அந்த அலவன்ஸ் இனை வழங்க முகாமைத்துவம் மறுத்தது.

மகீஷா தான் அக் கம்பனியின் ஊழியர் ஒருவரா அல்லது அல்லவா என உமது ஆலோசனையைக் கோருகின்றாள். பொருத்தமான சட்ட ஆதாரங்களை ஆதாரம் காட்டி மகீஷாவிற்கு ஆலோசனை வழங்குக.

**(25 புள்ளிகள்)**

2. சட்டவாக்க சபையானது ஒவ்வொரு வழக்கின் சூழ்நிலைகளிலும் எது நியாயமும் ஒப்புரவுமானது என்பதனைத் தீர்மானிப்பதற்கான மட்டுப்பாடற்ற தற்துணிபினை அறிவுபூர்வமாக அந்த நியாயசபைக்கு வழங்கியுள்ளது. உண்மையில், இந்த தற்துணிபானது நீதிமுறையாக பிரயோகிக்கப்பட வேண்டியுள்ளது. விசேடமாக அதனது செயற்பாடுகளின் பரப்பெல்லையை விதித்துரைக்க அல்லது வரையறுக்காதிருக்க சட்டவாக்க சபையானது தீர்மானித்திருக்காத போது, இந்த நீதிமன்றமானது அந்த தற்துணிபின் பிரயோகத்தை மட்டுப்படுத்துகின்ற இறுக்கமான விதிகளை முற்போட்டால் அது அந்த தற்துணிபின் முறையான பிரயோகத்திற்கு உகந்தது அல்ல.

***Caledonian (Ceylon) Tea and Rubber Estate Ltd Vs. Hillman (***79 (1) NLR 142) வழக்கில் நீதியரசர் சர்வானந்தா கூறியது.

தொழில் நியாயசபையொன்றின் தத்துவங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான நியதிச் சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகள் ஆகியவற்றின் பின்னணியில் மேலுள்ள கூற்று மீது கருத்துரை செய்க.

**(25 புள்ளிகள்)**

3. (அ) ஏஎஸ்ஜ சூ பிறைவேற் லிமிற்றெட் என்பது அதனது வியாபாரத்தை 2018 இல் ஆரம்பித்தது என்பதுடன், அதனது வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அறுபது வேலையாட்களை ஊழியத்தில் அமர்த்துகின்றது. அக் கம்பனியில் ஏற்பட்ட நிதி நெருக்கடி காரணமாக அக் கம்பனியின் முகாமைத்துவமானது நீர்கொழும்பிலுள்ள அதனது பிராந்திய கிளையை மூடிவிட தீர்மானித்தது. அக் கம்பனியானது அக் கிளையின் மூடுகை காரணமாக 01-11-2021 இலிருந்து அவர்களுடைய ஊழியமானது

முடிவுறுத்தப்படுமென சுரங்க, ரஞ்சன், நுவான் மற்றும் றூவினி ஆகியோருக்கு அறிவித்தது.

சுரங்க அந்த நீர்கொழும்பு கிளையின் முகாமையாளர் ஆவார். சுரங்க அக் கம்பனியின் நிரந்தர ஊழியர் என்பதுடன் அவர் அப் பதவிக்கு 2019 ஜனவரியில் நியமிக்கப்பட்டார். ரஞ்சனும் நுவானும் அக் கிளையின் விற்பனை உதவியாளர்கள் என்பதுடன், அவர்கள் 01-05-2020 அன்று ஒரு வருட ஒப்பந்தத்தின் கீழ் வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அக் கம்பனியானது அவர்களுடைய ஒப்பந்தத்தை 01-05-2021 இலிருந்து மற்றொரு ஆறு மாத காலத்திற்கு புதுப்பித்தது. றூவினி அக் கிளையில் 2019 இலிருந்து சுத்திகரிப்பாளர் ஒருவராகப் பணியாற்றுகின்றார் என்பதுடன் அவர் வேலைக்கு கிரமமின்றி வருகை தருகின்றார். அக் கிளையில் வேலை இருக்கும் போதே வேலைக்கு றூவினி அழைக்கப்படுகின்றார். றூவினிக்கு நாளாந்த அடிப்படையில் பணக்கொடுப்பனவு செய்யப்படுகின்றது.

சுரங்க, ரஞ்சன், நுவான் மற்றும் றூவினி ஆகியோர் அவர்களுடைய ஊழிய முடிவுறுத்தலுக்கு எதிராக நிவாரணம் தொடர்பில் உமது ஆலோசனையைக் கோருகின்றனர். பொருத்தமான நியதிச் சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளை ஆதாரம் காட்டி அவர்களுக்கு ஆலோசனை வழங்குக.

**(15 புள்ளிகள்)**

(ஆ கொவிட் - 19 பெருந்தொற்றின் காரணமாக எழுகின்ற தொழில்சார் விடயங்களின் பின்னணியில் தொழில்தருநர்களதும் வேலையாட்களதும் அக்கறைகளை வேலையாட்கள் ஊழிய முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் சமப்படுத்துகின்றதா என மதிப்பீடு செய்க.

**(10 புள்ளிகள்)**

4. (அ) சர்வதேச தொழில் தராதரங்களின் பின்னணியில் இலங்கையில் பெண்கள் ஊழியத்திலமர்த்தப்படுவது தொடர்பான சட்ட ஆட்சிப் பரப்பை மதிப்பீடு செய்க.

**(13 புள்ளிகள்)**

(ஆ) இலங்கையில் சிறுவர் வேலைக்கமர்த்தல் தொடர்பான தொழில் தராதரங்கள் சர்வதேச தொழில் தராதரங்களுக்கு இணங்க உள்ளதா என மதிப்பீடு செய்க.

**(12 புள்ளிகள்)**

5. நியூ லங்கா அப்பெரல்ஸ் லிமிற்றெட் பல நாடுகளுக்கு ஆடைகளை ஏற்றுமதி செய்கின்றது. நியூ லங்கா அப்பரல்ஸ் லிமிற்றெட்டில் உள்ள 75 சதவீதமான ஊழியர்கள் *சமஹி கம்கரு சமித்திய* என அழைக்கப்படுகின்ற தொழிற் சங்கம் ஒன்றில் அங்கத்தவர்களாக உள்ளனர். சோமரத்ன என்பவர் அந்த தொழிற் சங்கத்தின் அங்கத்தவர் ஒருவர் என்பதுடன் அவர் உள்ளூராட்சி தேர்தலொன்றில் போட்டியிட கருதுகின்றார். அண்மையில், *சமஹி கம்கரு சமித்திய* இனது அங்கத்தவர்கள் சோமரத்ன இனது தேர்தல் பிரச்சாரத்திற்கு நிதி உதவி அளிப்பதற்கான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி உள்ளார்கள். அதேவேளை, நியூ லங்கா அப்பெரல்ஸ் அக் கம்பனிக்கு 25 புதிய ஊழியர்களை வேலைக்குச் சேர்த்துள்ளது என்பதுடன் *சமஹி கம்கரு சமித்திய* இனால் ஒழுங்கு செய்யப்படுகின்ற எந்தவொரு தொழிற் சங்க நடவடிக்கைகளிலும் சேரா வேண்டாமென அவர்கள் அவர்கள் அறிவுறுத்தப்பட்டனர். அக் கம்பனியின் முகாமைத்துவமானது *சமஹி கம்கரு சமித்திய* இனது தலைவருக்கு அவரது தேர்தல் பிரசாரத்தில் சோமரத்ன இற்கு நிதி உதவி அளிப்பது மற்றும் ஆதரவு அளிப்பது ஆகியவைகளிலிருந்து தவிர்ந்திருக்குமாறு கடிதம் ஒன்றை வழங்கி உள்ளது. மேலும், முகாமைத்துவமானது சோமரத்னவின் தேர்தல் பிரச்சாரத்திற்கு ஆதரவு அளிப்பது என்ற அதனது தீர்மானத்தை அந்த தொழிற் சங்கமானது மீளப்பெறும் வரை அந்த தொழிற்சங்கத்துடன் எந்தவொரு பேர பேச்சுவார்த்தையிலும் ஈடுபடுவதில்லை என தீர்மானித்துள்ளது. எவ்வாறாயினும், *சமஹி கம்கரு சமித்திய* தேர்தலில் சோமரத்ன இற்கு ஆதரவு அளிக்கும் அந்த தீர்மானத்தை முன்னெடுத்துச் செல்ல தீர்மானித்துள்ளது. அந்த தொழிற்சங்க அங்கத்தவர்கள் அவர்களுடைய தொழிற்சங்க செயற்பாடுகளில் முகாமைத்துவத்தின் தலையீடு தொடர்பாக அவர்களுடைய அதிருப்தியினைக் காண்பிப்பதற்காக அடையாள வேலை நிறுத்தமொன்றில் ஈடுபட தீர்மானித்தார்கள். அந்த வேலை நிறுத்தத்தின் போது *சமஹி கம்கரு சமித்திய* பதாகை ஏந்துதலொன்றில் (picketing) அக் கம்பனி இடப்பரப்புகளில் ஈடுபட்டது. பதாகை ஏந்துதலில் ஈடுபட்டவர்கள் அக் கம்பனியின் கதவுகளையும் நுழைவாயில்களையும் தடை செய்ததுடன், ஏற்றுமதி கட்டளைகளுக்காக பொருட்களை கொண்டு செல்வதிலிருந்து அக் கம்பனியைத் தடுத்தார்கள். தொழிற்சங்க அங்கத்தவர்கள் சிலர் அந்த பதாகை ஏந்துதலின் போது பிரதான நுழைவாயிலில் குறுஞ்சுற்று தொலைக்காட்சிக் கமெராக்களை (CCTV Cameras) சேதப்படுத்தினார்கள். சில பதாகை ஏந்துபவர்கள் முகக் கவசம் ஒன்றை அணியாது அந்த பதாகை ஏந்துதலில் பங்கேற்றார்கள்.

மேலுள்ள சூழ்நிலையில் சம்பந்தப்பட்ட சட்ட விடயங்களை அடையாளங் காண்பதுடன், பொருத்தமான நியதிச் சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகள் என்பவைகளின் பின்னணியில் இவ் விடயங்கள் தொடர்பான சட்ட தாற்பரியங்களை ஆராய்க.

**(25 புள்ளிகள்)**

பதிப்புரிமை உள்ளது.